4. அறிவிப்புகள்.

(அ) சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதி வராண்டா, வளாகம் பாதுகாக்கப் பெறுவது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர், விளக்கத்திலே ஒன்றைக் குறிப்பிட்டார்கள். அந்த விளக்கத்திலே அது என்னுடைய ஆளுகைக்கு உட்பட்டது என்று அவர்கள் குறிப்பிட்டதை நீங்கள் எல்லோரும் அறிவீர்கள். ஆகவே அந்த ஆட்டோ ரிக்ஷாக்களை, டாக்சிகளை உள்ளே நிறுத்துவது என்பதை மாற்றி இனிமேல் சுற்றுச் சுவருக்கு வெளியே தான் நிறுத்துவதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு ஹாஸ்டலில் சுற்றி நிறையபேர் அறைக்கு வெளியே படுக்கிறார்கள். அறைக்கு உள்ளே படுப்பவர்களைப் பற்றி பிரச்சினை இல்லை. அறைக்கு வெளியே படுப்பவர்களைத் தவிர்ப்பதற்கான ஏற்பாட்டை நான் மேற்கொள்ள இருக்கின்றேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான நடவடிக்கைகளை அரசும் மேற்கொள்ளலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) முன்பண மானியக் கோரிக்கைகள் 1984–85. [ஆ.இ.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ், 1984–85 ஆம் ஆண்டிற்கான முன்பண மானியக் கோரிக்கைகளை, 23–3–1984 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(இ) இறுதி துணை நிதி நிலை அறிக்கை 1983–84 [ஆ.இ.]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 205 (1) மற்றும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 196 (1) ஆகியவற்றின் கீழ், 1983–84 ஆம் ஆண்டிற்கான இறுதித் துணை நிதிநிலை அறிக்கையை 23–3–1984 ஆம் தேதி வெள்ளிக்கிழமை, சட்டமன்றப் பேரவைக்கு அளிக்க வேண்டுமென ஆளுநர் அவர்வர்கள் குறித்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.